திரு. துரை முத்துசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. அவருக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லை என்றால் உட்கார வேண்டியதுதான். அவர்களது பதில் உங்களுக்கும் சேர்த்துத்தான்.

திரு. துரை முத்துசாமி : நான் கேட்க விரும்புவது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற விதிகளைப் படித்துவிட்டுப் பேசுங்கள். தயவு செய்து உட்காருங்கள். எது வேண்டுமானாலும் பேசக்கூடாது. இது மன்றம். அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் சேர்த்து பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எழுந்திருந்து வலியுறுத்துவது என்பது நம் மரபுகளுக்கு அழகல்ல. ஆகவே, விதிகளுக்கு உட்பட்டுப் பேசுங்கள்.

(2) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஒரு கொலை வழக்கைப்பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் ஆதாரங்களை அளித்தல் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று பேரவை உறுப்பினர் நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கொலை வழக்கைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அவர், அதைப் பேசும்போது நான் ஆதாரங்கள் வைத்திருக்கிறேன், நான் காட்டுகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்ன பிறகு அவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்காமல் இருக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்குக் காரணம் இந்த மன்றத்தில் அவர்கள் பேசியதற்குப் பின்னால், பத்து நாட்களுக்கு முன்னால் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன், இப்பிரச்சனை பற்றி. நிரூபிப்பது பற்றி, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்று கேட்டேன். நீங்கள் பதில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள், பத்து நாட்களாகிவிட்டன. (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்குப் பதில் சொல்கிறேன். இராதா அவர்கள் கேட்டதற்கு, நான் நடவடிக்கைகள் எடுத்து அவருக்கு எழுத்து மூலம் இன்றைக்குள் தர வேண்டும் என்று அனுப்பி இருக்கிறேன். அவர் இங்கே அவைக்கு எழுத்து மூலம் தரவேண்டுமென்று, இன்றைக்குள் தரவேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தாங்கள் அவருக்கு ஒரு இரகசியக் கடிதம் எழுதியிருப்பதாக ரகுமான்கான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவருக்கு இரகசியமாக கடிதம் எழுதிவிட்டு அதைத் தாங்கள் அவையில் அறிவித்தது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரகசியம் என்று சொல்லவில்லை. அனுப்பியது என்ன என்று சொல்லவில்லை. அனுப்பியிருக்கிறேன் என்று மட்டும்தான் கூறியிருக்கிறேன். இன்றைக்குள் தர வேண்டும் என்று சொன்னேன். என்ன எழுதினேன் என்று உள்ளே நுழையவில்லை. என் தீர்ப்பையொட்டி அவருக்கு நினைவூட்ட கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, இந்துப் பரீட்சைத் தாள்கள் சம்பந்தமாக காலையில் விதி 42-ன் கீழ் நான் கொடுத்திருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சனையோடு வாருங்கள். ஒன்றைச் சொல்லுங்கள், அதை நின்று சொல்லுங்கள்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : முக்கியமாக வியாசர்பாடியில் நடந்த சம்பவம் மற்றும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக எங்களால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு சந்தர்ப்பங்களில் பேச வாய்ப்பிருக்கிறது என்று சொல்லி தள்ளுபடி செய்கிறீர்கள். இது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விதியின் கீழ் இது சரி இல்லை என்று அவர்கள் சொல்ல முடியும் என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். நீங்கள் கொடுத்திருக்கிற அத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்களும் இன்றைய மானியக்கோரிக்கைக்குள் அடங்கியவை. ஆகவே, நீங்கள் எழுப்பியுள்ளவை அதில் அடங்கும். ஆகவே, தயவு செய்து சரிவர சிந்தித்து அப்பிரச்சனைகள் எல்லாம்பற்றி இன்றைய மானியக் கோரிக்கைமீது பேசுகிறபோது அதில் தாராளமாகப் பேசுங்கள். அமருங்கள்.